**கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளுடன் கூடியவை.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டு தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

### 1 அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 298 | அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் |
| 300 | உணவு ஆணையாளர் திணைக்களம் |
| 301 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் |
| 302 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு |

### 2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 04 திணைக்களங்களினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தின் போதே தயாரிக்கப்பட்டிருந்தது

| அமைச்சு/ திணைக்களம் | தேறிய ஏற்பாடு | | | பயன்பாடு | | | சேமிப்புக்கள் | | | மொத்த சேமிப்புக்கள் நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழுபவை ரூபா | மூலதனம் ரூபா | மொத்தம் ரூபா | மீண்டெழுபவை ரூபா | மூலதனம் ரூபா | மொத்தம் ரூபா | மீண்டெழுபவை ரூபா | மூலதனம் ரூபா | மொத்தம் ரூபா | % |
| கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் அமைச்சு | 413,997,645 | 507,985,355 | 921,983,000 | 398,592,279 | 501,180,241 | 899,772,520 | 15,405,366 | 6,805,114 | 22,210,480 | 2.41 |
| அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 52,192,000 | 59,500,000 | 111,692,000 | 50,764,938 | 34,915,557 | 85,680,495 | 1,427,062 | 24,584,443 | 26,011,505 | 23.29 |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | 80,233,800 | 27,962,200 | 108,196,000 | 65,835,544 | 27,127,649 | 92,963,193 | 14,398,256 | 834,551 | 15,232,807 | 14.08 |
| கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 44,290,000 | 463,650,000 | 507,940,000 | 42,472,157 | 426,038,313 | 468,510,470 | 1,817,843 | 37,611,687 | 39,429,530 | 7.76 |
| கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 10,520,000 | 326,000 | 10,846,000 | 8,155,438 | 214,740 | 8,370,178 | 2,364,562 | 111,260 | 2,475,822 | 22.83 |

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் நிலைமையை பிரதிபலிக்கும், இங்கு (அ) முதல் (ஈ) பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.11 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு விலகல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 116 ஆம் தலைப்பின் கீழ் 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 383,500 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் எஞ்சியிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் 31% முதல் 78% வரையான வீச்சிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(iii) நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக 08 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து பயன்பாட்டின் பின்னர் சேமிப்புகளை ரூபா 1,238,628 ஆல் மிகைத்து ரூபா 1,943,023 தொகைக்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்கப்பட்டிருந்தது.

### (ஆ) கட்டுநிதிக் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் ரூபா 3,000 கட்டுநிதி வரவு மீதியாக இருந்ததுடன் அது 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகளாக இருந்தது.

## 1.6 செயலாற்றல்

2010 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படா திருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) 2009 திசெம்பர் மற்றும் 2010 சனவரி காலப்பகுதியில் ஏற்பட்ட அரிசிப் பற்றாக்குறைக்கு தீர்வொன்றாக இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 103,887,950 பெறுமதியான 1,500 மெற்றிக் தொன் வெள்ளை அரிசி உரிய காலத்தில் விநியோகிக்கப்படாது ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டமையால் அரிசியின் தரம் குறைவடைதல் மற்றும் நிறம் மாறுதல் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விலையான ரூபா 56 இலும் குறைவாக அதாவது ரூபா 50 முதல் 45 வரையான விலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய To/Gov/03/GE/121/2010 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அரிசி விற்பனை மூலம் ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்நட்டம் நிதிப்பிரமாணம் 102 □ 108 இன் பிரகாரம் பதிவழிக்க வேண்டிய போதிலும், வருமானத்திற்கும் கிரயத்திற்குமிடையே கணக்கிடப்பட்ட வேறுபாடான ரூபா 31,810,997 தொகையான நட்டம் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஈடாக தயாரிக்கப்பட்டிருந்த 2010/2011 ஆம் ஆண்டுகளில் அரிசியை களஞ்சியப்படுத்துதல் தொடர்பான தந்திரோபாயத் திட்டத்தின் பிரகாரம் 15 களஞ்சியங்களில் 50,000 மெற்றிக் தொன் அரிசியை களஞ்சியப்படுத்தல் 2011 சனவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் விநியோகம் தொடர்பாக எவ்வித கட்டளைகளும் அறிவுறுத்தல்களும்

## 1.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) மியன்மார் அரசிடமிருந்து 2008 ஆம் ஆண்டின் போது 7,000 மெற்றிக் தொன் வெள்ளை அரிசி இறக்குமதி செய்வதற்காக முழுத்தொகையான அ.டொ. 2,800,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் 48,159 பெறுமதியான 111 மெற்றிக் தொன் இருப்பொன்று இதுவரையில் கிடைக்கப் பெறாமல் இருந்ததுடன், இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் ரூபா 4,660,590 தொகையான இருப்பு சேதமடைந்திருந்தன. அவ்வாறே இவ் அரிசி இறக்குமதியின் போது ஏற்பட்ட தாமதம் காரணமாக செலவு செய்யப்பட்ட ரூபா 98,571 தொகையான செலவினமொன்றை □கோப்பெட்□ நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. அந்நிறுவனத்தின் அரிசி இருப்பை உள்நாட்டு நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் விநியோகித்த காரணத்தால் ரூபா 5,991,508 தொகையை மேலும் அறவிடமுடியாமல் காணப்பட்டதுடன், இவ் அரிசியை இறக்குமதி செய்வதற்காக சுழற்சி நிதியத்திலிருந்து தற்காலிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 360 மில்லியன் உட்பட ரூபா 480 மில்லியன் பொதுத் திறைசேரியிருந்து கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் மேலும் ரூபா 66.4 மில்லியன் தீர்க்கப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2009 திசெம்பர் 23 ஆம் திகதி மியன்மாரிலிருந்து 3,000 மெற்றிக் தொன் சீனியை இறக்குமதி செய்வதற்காக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக □விசேட பொருளாதார மத்திய நிலைய பராமரிப்பு நிதியத்திலிருந்து□ □ ரூபா 65 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் பணம் செலுத்தி கட்டளையிடப்பட்ட 3,000 மெற்றிக் தொன் சீனி இருப்பில் ரூபா 15.8 மில்லியன் பெறுமதியான 223 மெற்றிக் தொன் சீனி மட்டுமே கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் கூடுதலாகச் செலுத்தப்பட்ட 443,665 அ.டொ அதாவது ரூபா 49.2 மில்லியன் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இச்சீனி

## 1.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சிக்கனமில்லாமலும் நிறுவனத்திற்கு சாதகமில்லாத முறையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்களும் இருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. கீழே காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை உதாரணமாக கூறலாம்.

(அ) புடவைகள் மற்றும் ஆடைகள் வியாபாரத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக அமைச்சினால் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான இரத்மலான களஞ்சியத் தொகுதியின் 04 ஆம் இலக்க களஞ்சியம், 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 11,601,741 தொகை செலவில் திருத்தியமைக்கப்பட்டிருந்ததுடன், அத்திருத்தச் செலவினம் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. திருத்த வேலைகள், பகிரங்க விலை கோரல்கள் மேற்கொள்ளப்படாமல் நேரடியாக தனியார் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த புடவைகள் மற்றும் ஆடைகள் வியாபாரத் தொகுதி இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. அமைச்சினால் இந்த ஆடைகள் வியாபாரத் தொகுதியை குத்தகைக்கு வழங்குவதற்காக 2009 யூலை 26 ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தை மேற்கொண்டமைக்காக ரூபா 345,184 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 11,946,925 கூட்டுத்தொகையான முழுத்தொகையும் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) இரத்மலான பொருளாதார மத்திய நிலையம் மற்றும் அடுத்துள்ள சுனாமி வீடமைப்பு திட்டம் என்பவற்றை வேறாக்குவதற்கு எல்லை வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக அமைச்சு ரூபா 1,597,372 தொகையை செலவிட்டிருந்தது. பகிரங்க விலைகோரல் மேற்கொள்ளப்படாமல் தனியார் ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் வேலி அமைக்கப்பட்டு ஓராண்டு கழிவதற்கு முன்னர் வேலி ஆங்காங்கே உடைந்து காணப்பட்டது. அவ்வாறே இவ்வேலி தற்காலிக பாதுகாப்பற்ற வேலியாக மட்டுமாக இருந்தமையும் வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்தும் வியாபாரத் தொகுதிக்கு

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று மட்டம் | 11 | 09 | 02 | - |
| மூன்றாம் மட்டம் | 14 | 10 | 04 | - |
| இரண்டாம் மட்டம் | 87 | 65 | 22 | - |
| ஆரம்ப மட்டம் | 59 | 45 | 05 | - |
| ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 09 | - | 01 |
| மொத்தம் | 171 | 138 | 33 | 01 |

பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2007 யூலை 02 ஆம் திகதி முதல் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்பட்டிருந்த சட்ட ஆலோசகர் வேறு ஒரு நிறுவனமொன்றில் வேலையைப் பொறுப்பேற்றமையால் அமைச்சின் கடமைகளுக்காக சமூகமளிக்காமல் 2009 மார்ச் 24 ஆம் திகதி முதல் 2009 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு ரூபா 106,904 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ii) | 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | பதவியொன்றில் பதில் கடமை புரிவது ஆகக்கூடியது 03 மாதங்களுக்கு கீழாக இருக்க வேண்டிய போதும் திணைக்களத்தின் முன்னால் பணிப்பாளர், 2009 மே 05 ஆம் திகதி இளைப்பாறியதன் பின்னர் இதுவரை அப்பதவி வெற்றிடமாக காணப்பட்டது. |

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

2007 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்தின் புதிய ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்காக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியனும் வருடாந்த வரவு செலவு திட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் மேலும் ரூபா 135 மில்லியன் அதாவது மொத்தம் ரூபா 235 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்படி நிர்மாணம் 2012 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையில் திணைக்கள வளவில் மேற்கொள்வதற்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து 2009 நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வெவ்வேறு சேவைகளை வழங்குவதற்காக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூபா 15,325,542 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க திணைக்களம் தற்போது இருக்கும் இடத்தில் அளவீட்டு ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பது பொருத்தமானதல்ல என்பதால் அதற்கு கொழும்பு நகருக்கு அண்மித்த கிராம அல்லது பகுதியளவு நகரப் பிரதேசமொன்றை வழங்குமாறு திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதன் பிரகாரம் இவ் ஆய்வுகூடம் ஹோமாகம பிட்டிப்பன மாஹேனவத்த என்ற இடத்தில் நிர்மாணிப்பதற்காக 2009 திசெம்பர் 17 ஆம் திகதிய அமப/09/26/01/342/013 ஆம் இலக்க அமைச்சரவை செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் 2009 திசெம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் குறித்த இடத்தில் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தால் மேற்படி ரூபா 15,325,542 தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தது.

## 2.7 உள்ளகக் கட்டுப்பாடு

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று இருந்த போதிலும் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமல் இருந்துடன், அக்கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இவ் அறிக்கையின் (அ) முதல் (ஊ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 3.4 முதல் 3.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 ஒதுக்கீட்டுக் கணக்கின் சிங்கள மற்றும் ஆங்கிலப் பிரதிகள் 2011 மார்ச் 31 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், தமிழ் பிரதி 2011 ஏப்ரல் 27 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்பிரதியில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2011 மே 05 ஆம் திகதி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதுடன், மீண்டும் 2011 செப்தம்பர் 28 ஆம் திகதி அதாவது 05 மாதங்களிற்குப் பின்னரே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) விரிவான பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், போன்ற தேவையான சான்றுகள் திணைக்களத்தில் காணப்படாமை/ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,230,770,749 கூட்டுத்தொகைக்குரிய 18 கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 609,000 தொகையாக இருந்ததுடன், ஒதுக்கீட்டுக் கணக்கின் திணைக்கள மற்றும் திறைசேரிப் பதிவேடுகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 614,000 ஆக இருந்தது.

(iii) திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் 6000/0000/00/0003/0030/000 ஆம் இலக்க கணக்கில் ஆண்டின் போதான செலவு வைத்தல்கள் ரூபா 3,553,698 ஆக இருந்த போதும் 2010 திசெம்பர் திறைசேரி அச்சுப் குறிப்பில் செலவு வைத்தல்கள் எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்குறித்த வைப்புக் கணக்கில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டின் போதான வரவு வைத்தல்கள் ரூபா 3,914,557 ஆக இருந்தது. திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் வரவு வைத்தல்கள் ரூபா 3,553,698 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 360,859 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(v) 6000/0000/00/0011/0540/000 ஆம் இலக்க வைப்புப் பதிவேடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு ii இல் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டிருந்த வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்கள் என்பன மாற்றிக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 320,000 தொகையான வரவு வைத்தல் செலவாகவும் ரூபா 22,670,000 தொகையான செலவுகள் வரவாகவும் பதியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களப் பதிவேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கணக்கின் மீதி ரூபா 22,350,000 ஆன மறைப் பெறுமதியாக அவதானிக்கப்பட்டது. ஆயினும் ஒதுக்கீட்டுக் கணக்கு திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் திணைக்களப் புத்தகங்கள் என்பவற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கணக்கின் மீதி ரூபா 22,350,000 ஆன நேர்ப்பெறுமதியாக இருந்தது.

தொகையை 2010 ஆம் ஆண்டின் போது இலாப நட்டக் கணக்குச் சீராக்கற் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்படைப்பு மதிப்பீட்டு பெறுமதி ரூபா 4,000,000 ஆன பூஸ்ஸ களஞ்சியத்தை கடற்படைக்கு ஒப்படைக்கும் போது அதன் கிரயம் மற்றும் தளபாட உபகரணங்கள் கைதவிர்ப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 174,445 இல் கிரயத்தை இனங்கண்டு குறித்த கணக்குகளிலிருந்து அப்பெறுமதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததாக 2007 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக திறைசேரிக்கு தெரியப்படுத்தி எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதாக 2009 பெப்ரவரி 17 ஆம் திகதிய ஐஏ/0408/14 ஆகார ஆம் இலக்க உங்களது பதில் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த 03 சொத்து அகற்றல் கணக்குகளில் ரூபா 25,463,535 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் தொடர்பாக அதற்குரிய கிரயம் மற்றும் திரண்ட தேய்வு என்பன இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) உணவு ஆணையாளர் திணைக்களத்தால் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 69 களஞ்சியங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை களஞ்சிய வாடகை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 81,504,027 ஆக இருந்தது.

(v) ரூபா 1,072,198 பெறுமதியான 3 மோட்டார் வாகனங்கள் விவசாய அபிவிருத்தி அமைச்சிற்கும் கூட்டுறவு அமைச்சிற்கும் 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதும் அவ்வாகனங்களின் பொறுப்பளித்தல் பெறுமதி, குறித்த 02 அமைச்சுக்களிலிருந்தும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத் தொகைக்கு இடையே ரூபா 1,066,667 தொகையான முரண்பாடு காணப்பட்ட போதிலும் அம்முரண்பாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(x) உணவு பகிர்ந்தளித்தல் முற்பணக் கணக்கின் மீதிக்குரிய பரீட்சை மீதி மற்றும் பொறுப்புக்கள் தீர்ப்பனவு கூற்று என்பவற்றிற்கு இடையே ரூபா 5,904,116 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(xi) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட, கூட்டுறவுக் கடன் மீதி தொடர்பான விரிவான பட்டோலை மற்றும் பொழிப்பாக்கப்பட்ட பட்டோலைக்கு இடையே ஆண்டின் போது பெறுவனவுகள் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளில் முறையே ரூபா 1,429,364 மற்றும் ரூபா 983,581 வேறுபாடு காணப்பட்டது.

## 3.4 சொத்து முகாமைத்தும்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சமையலறை மற்றும் பேக்கரி முற்பணக் கணக்கின் கலைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அக்கணக்கிற்குரிய 24 பொருள் உருப்படிகள் 2011 மார்ச் 31 ஆம் திகதி வரை பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ii) திணைக்களத்தின் தச்சுக் கைத்தொழில் அறையை திருத்தியமைப்பதற்காக 2010 திசெம்பர் 31 இல் ரூபா 352,021 தொகை ஒப்பந்தகாரர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த அறையைத் திருத்துவதற்கான தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருக்கவில்லை.

மூலம் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தினால் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | தாபன விதிக்கோவை<br>XXXIIIஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு | - | 2008 பெப்ரவரி 05 ஆம் திகதி இடம்பெற்ற பொதுக் கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் திணைக்களத்தின் களஞ்சியம் தொடர்பான வாடகை ஒப்பந்தம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி திருத்தம் செய்யப்பட்டிருந்தது.<br>குத்தகை உறுதிகளின் வரைவறிக்கையைத் தயாரித்து அனுப்பிவைக்கும் படி சட்டமா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரிய அதிகாரி அங்கீகரித்த நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான முழுமையான கூற்றொன்றை அனுப்பப்பட வேண்டிய போதும் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஒப்பந்தத்திற்காக அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு திணைக்களம் பயன்படுத்தியிருந்த உடன்படிக்கை மற்றும் திருத்தம் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு இடையேயும் திருத்திய உடன்படிக்கை மற்றும் அதற்கு பின்னரான உணவு ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்த களஞ்சிய உடன்படிக்கைக்கு |

| | | |
|---|---|---|
| | | நிதிக்கூற்றுக்களில் முன்னரே குறிப்பிடப்பட வேண்டிய போதும் அதில் குறிப்பாக திகதியொன்றை குறிப்பிட முடியாதென குறிப்பிடப்பட்டிருந்தது. |
| நி.பி 756 | 169,285,130 | 04 நிலையான சொத்து உருப்படிகள் தொடர்பாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.6 செயலாற்றல்

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள் (நோக்கத்திற்குப் புறம்பான போன்றவை)

திணைக்களம் தமது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2008 ஆகஸ்ட் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த மீளமைக்கப்பட்ட திணைக்களத்தின் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமும் உணவுப் பொருள் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு ஒரு இலட்சம் மெ.தொன் அரிசியை களஞ்சியப்படுத்தி வைத்தல் பிரதான நோக்கமாக இருந்த போதும் கடந்த 03 ஆண்டு காலப்பகுதியில் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) அவ்வாறே 2011 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான திணைக்கள நிலுவை வாடகை அறிக்கையின் பிரகாரம் களஞ்சியங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 47,426,404 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை 1 மாதம் முதல் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டதுடன், அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 73,124 சதுர அடி அளவிலான திணைக்களத்தின் தலைமை அலுவலக வளவில் 36,139 சதுர அடி அளவிலான காணி மற்றும் 12 கட்டிடங்கள் என்பன 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது. அப்போதிருந்த வர்த்தக, வாணிப, நுகர்வோர் அலுவல்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் இக்கட்டிடங்கள் பாவனைக்காக மட்டும் ஒப்படைக்கப்படுவதாகவும் இது தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய வாடகை மற்றும் ஏனைய அறவீடுகள் காலக்கிரமத்தில் அறியத் தருவதாக தெரிவித்திருந்தார். எனினும் இதுவரை எவ்வித வாடகையோ அல்லது குத்தகையோ அறவிடப்படாமல் இருந்ததுடன், உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் தற்போது அக்கட்டிடங்களில் திருத்த வேலைகளும் புதிய நிர்மாணிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**3.9 நட்டங்களும் சேதங்களும்**

தெரிவுப் பரிசோதனையின் போது கீழே காட்டப்பட்டுள்ள நட்டங்களும் சேதங்களும் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சேவையை விட்டுச் சென்ற/ சேவையிலிருந்து நீக்கப்பட்ட / வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 75 களஞ்சிய காப்பாளர்களிடமிருந்து 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 20,908,266 தொகையும் தகவல்களைக் கண்டுபிடிக்க முடியாத 54 களஞ்சியக் காப்பாளர்களிடமிருந்து 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,208,681 தொகையுமாக ரூபா 25,116,947 கூட்டுப்பெறுமதியான இருப்புக் குறைவிற்கான மிகை அறவீடு காணப்பட்ட

தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் திணைக்களத்தில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. ஒதுக்கீட்டு தலைப்பு 301 -கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஒக்தோபர் 05 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தர்களினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

| | | |
|---|---|---|
| | | பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்காக உதவியளிப்பதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு புறம்பான செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. |

(ii) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| நி.பி 264 | 29,754,281 | பெறுவோனால் பணம் பெற்றுக் கொண்டமைக்காக சான்றுதிப்படுத்தும் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| நி.பி 371(2) | 807,725 | வழங்கப்பட்ட துணைக் கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவு பெற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 371(5) | 151,960 | வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட கட்டுநிதி ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| நி.பி 1646 | - | நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 04 |

செயற்பாட்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 183,750,000 தொகையை உடன்படிக்கை ஒன்றுமின்றி இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், ஓராண்டு கடந்திருந்த போதும் திறைசேரி சுழற்சி நிதியத்திற்கு அத்தொகையில் ரூபா 171,463,497 மட்டுமே மீள் நிரப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 12,286,503 மீதியான நிலுவையொன்று காணப்பட்டது.

(iii) இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் இலங்கை கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கும் 2004 ஆம் ஆண்டின் போது மக்கள் வங்கியிலிருந்து ரூபா 80 மில்லியன் கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக கூட்டுறவு மிகை நிதியத்திடமுள்ள ரூபா 80 மில்லியன் நிலையான வைப்புக்களை பிணை வைப்பாக வைக்கப்பட்டிருந்தது. அதில் இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடனை மீளச் செலுத்தாமையால் மிகை நிதியத்தின் நிலையான வைப்புக்களிலிருந்து நிலுவையாக இருந்த ரூபா 16.4 மில்லியன் தொகையான கடனை மக்கள் வங்கியால் எதீரீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட தொகை 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் திணைக்களத்திற்கு சங்கத்தால் செலுத்தப்படாமல் இருந்தது.

(iv) மேற்படி கடன்தொகைக்கு மேலதிகமாக இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2008 ஆம் ஆண்டின் போது மக்கள் வங்கியிலிருந்து நாணயக் கடிதமொன்றை பெற்றுக்கொள்வதற்காக கூட்டுறவு மிகை நிதியத்திடமுள்ள ரூபா 50 மில்லியனான இரண்டு நிலையான வைப்புக்களை பிணைப் பொறுப்பாக வழங்கப்பட்டிருந்ததுடன், 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 35.8 மில்லியன் தொகையினை மேலும் விடுவிப்பதற்கு இருந்தது.

(v) தேசிய மட்டத்திலான 14 கூட்டுறவுச் சங்கங்கள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. அதில் 03 சங்கங்களில் புத்தகங்கள் பேணப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், மேலும் 03 சங்கங்களின் மேற்பார்வை நடவடிக்கை 2010 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஆரம்பித்த தினத்திலிருந்து

## 5. ஒதுக்கீட்டு தலைப்பு 302 - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 சனவரி 31 ஆம் திகதி குழுச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல்

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

(i) 30201 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றில் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 131,833 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) ஆரம்ப மீதி மற்றும் இறுதி மீதி என்பவற்றில் திணைக்களம் மற்றும் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் முறையே ரூபா 14,668 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iii) 2009 மார்ச் 23 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 124,718 ஆன கடன் மற்றும் முற்பண மீதிகள் இதுவரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 செயலாற்றல்

2010 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகள் எவ்வகையிலேனும் நிறைவேற்றப்படாமல்/ போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில காட்டப்பட்டுள்ளன.

(i) 2008 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட செயற்பாடான கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அதிகாரச்சட்டத் திருத்தம் 2010 திசெம்பர் 31 வரையில் பூர்த்தி செய்வதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

(i) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 27 ஆக இருந்தது. அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 72.9% ஆக இருந்தது. இதனால் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் உரிய முறையில் நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படக் கூடியதாக இருப்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி உள்ளவாறான பதவியணியில் பதில் கடமை நியமனம் 01 உம் அமைய சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகள் 02 உம் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர், வெற்றிடம் நிலவுகின்ற ஆணைக்குழுவின் செயலாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்காக 2008 பெப்ரவரி 12 ஆம் திகதி முதல் 2008 மே 11 வரையிலும், அதே உத்தியோகத்தர் அப்பதவியில் கடமைகளை மேவுகை செய்வதற்காக 2008 மே 12 ஆம் திகதி முதல் 2008 திசெம்பர் 31 வரையிலும் அரச உத்தியோகத்தரையே அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தில் நியமிக்கப்பட்டிருந்த போதும் அவ் உத்தியோகத்தர் 2009 சனவரி 01 ஆம் திகதி முதல் இதுவரை அப்பதவியில் பதில் கடமை புரிந்து வருவதுடன், அதற்கான அங்கீகாரம் பெற்றமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.